## மார்ச் - 28 - 2017

**1. 2016 ஆம் ஆண்டுக்கான 'ஹரி ஓம் ஆஷ்ரம் அலேம்பிக் ஆராய்ச்சி விருது' யாருக்கு வழங்கப்பட்டது?**

A. நீனா ஸ்ரீவஸ்தாவா

B. ராக்கேஷ் குமார்

C. P. சுந்தரேசன்

D. S. ராஜசேகரன்

**விடை: A. [நீனா ஸ்ரீவஸ்தாவா]**

**விளக்கம்:** டாக்டர். நீனா ஸ்ரீவஸ்தாவா அவர்களுக்கு 2016 ஆம் ஆண்டுக்கான 'ஹரி ஓம் ஆஷ்ரம் அலேம்பிக் ஆராய்ச்சி விருது' அடிப்படை மருத்துவ அறிவியல் ஆராய்சியை அங்கீகரிக்கும் விதமாக அவருக்கு அளிக்கப்பட்டது. இவ்விருதானது மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், பிரணாப் முகர்ஜி அவர்களால் ராஷ்டிரபதி பவனில் 28 மார்ச் 2017 அன்று வழங்கப்பட்டது.

**2. சமீபத்தில் மறைந்த, புகழ்பெற்ற இனவெறி எதிர்ப்பு போராளியான அகமது காத்ராதா எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

A. பாக்கிஸ்தான்

B. தென் ஆப்ரிக்கா

C. ஆப்கானிஸ்தான்

D. இஸ்ரேல்

**விடை: B. [தென் ஆப்ரிக்கா]**

**விளக்கம்:** தென் ஆப்ரிக்கா வாழ் - இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரபல இனவெறி எதிர்ப்பு போராளியான அகமது காத்ராதா (87), என்பவர் சமீபத்தில் தென் ஆப்ரிக்காவின், ஜோஹன்ஸ்பெர்க் எனுமிடத்தில் காலமானார். இவர் வெள்ளை சிறுபான்மையினரின் இன ஆட்சிக்கு எதிராக போராடிய நெல்சன் மண்டேலாவின் மிக நெறுங்கிய கூட்டாளிகளுள் ஒருவரும் ராபன் தீவில் சிறை வைக்கப்பட்ட சக கைதியுமாவார். 1964 ஆம் ஆண்டின் அதிகம் அறியப்படாத 'ரிவோனியா சோதனைக்குப்' பின்னர் தென்னாபிரிக்க இனவெறி எதிர்ப்பு அடையாளமான அவருடன் சேர்ந்து வாழ்நாள் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்ட மூன்று அரசியல் கைதிகளில் காத்ராதாவும் ஒருவர். ஆண்ட்ரூ மெலங்கனி மற்றும் டெனிஸ் கோல்ட்பர்க் ஆகிய இருவரும் இவருடன் தண்டனை விதிக்கப்பட்ட

மற்ற இருவராவர். இவர்கள் 1994ஆம் ஆண்டு தென் ஆப்ரிக்காவின் முதல் ஜனநாயக அதிபரானா நெல்சன் மண்டேலாவின் ஆட்சியில் நாட்டின் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றினர். மேலும் 2005ஆம் ஆண்டு காத்ராதா, முன்னாள் இந்தியா ஜனாதிபதியான டாக்டர். APJ அப்துல் கலாம் அவர்களிடமிருந்து 'பிரவாசி பாரதிய சம்மன் விருதினைப்' பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**3. அண்டார்டிக் மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் NCAOR தேசிய தலைநகர் எங்கு அமைந்துள்ளது?**

A. மினிகாய்

B. காவரட்டி

C. வாஸ் கோட காமா

D. அந்தராத்

**விடை: C. [வாஸ் கோட காமா]**

**விளக்கம்:** அண்டார்டிக் மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையமான (NCAOR) என்பது இந்தியாவின் பிரதான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R & D) நிறுவனமாகும், இது துருவ மற்றும் தெற்கு சமுத்திரப் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்படும் நாட்டின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு பொறுப்பானதாகும் அண்டார்டிகாவில் 36ஆவது விஞ்ஞான இலக்காக (36-ISEA)க்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான' இஸ்ரோ' இதனுடன் இணைந்துள்ளது, இது NCAORஆல் ஏற்பாடு செய்யப்பட்டது. காலநிலை மாற்றமே (36-ISEA)இன் முக்கிய பகுதியாகும் . இந்நிகழ்வின் பிரதான நோக்கம், பாரதி மற்றும் மைத்ரி ஆகியவற்றின் பரப்பளவிலான உலகளாவிய நில அமைப்பை) DGPS) அளவிற்கான பனிப்பாதைகளை நிறுவுவதாகும், இது செயற்கைக்கோள் தரவுகளிலிருந்து பெறப்பட்ட நிலப்பரப்பு, கடல் மற்றும் நிலத்தின் மீது பனிப்பொழிவு ஆகியவற்றை சரிபார்க்கப்படும் .அண்டார்டிக் மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் (NCAOR) தலைமையகம், கோவாவின் வாஸ்கோடா காமாவில் அமைந்துள்ளது.

**4. சமீபத்தில் எந்த வங்கி, "Money Plant பிரீமியம் ரூபே சர்வதேச பிளாட்டினம் டெபிட் கார்டை" வெளியிட்டது?**

A. IDBI வங்கி

B. பந்தன் வங்கி

C. தேனா வங்கி

D. கர்நாடகா வங்கி

**விடை: D. [கர்நாடகா வங்கி]**

**விளக்கம்:** கர்நாடகா வங்கி சமீபத்தில் "Money Plant பிரீமியம் ரூபே சர்வதேச பிளாட்டினம் டெபிட் கார்டை வெளியிட்டது இதன் மூலம் இவ்வங்கி அதன் பிரீமியம் மற்றும் HNI வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சலுகைகள் வழங்கவுள்ளதுஇந்த அட்டை .யை உள்நாட்டு மற்றும் சர்வதேச ரொக்கப் பணம் மற்றும் கொள்முதல் பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்தலாம். இந்த கார்டைப் பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு ரூ.75,000/- வரை ரொக்கப் பரிமாற்றமும், ரூ.2,00,000/ - வரையிலான கொள்முதல் பரிவர்த்தனைகளுக்கு) POS / இணைய வணிகம்( செய்வதற்கான அதிகபட்ச விலக்கு வரம்பு லட்ச 2மாகவும் தனிநபர் விபத்து காப்பீடு, 2 லட்சமாகவும் ஒரு காலாண்டில் இரண்டு இலவச லவுஞ்ச் (Lounge) அணுகல்கள் 30+ உள்நாட்டு விமான நிலையங்களிலும், 300+ உலகளாவிய விமான நிலையங்களிலும், எரிபொருள் செலவின குறைப்பு, பயன்பாட்டு செலவீனங்களுக்கும் ரொக்க திருப்பியளிப்பு மற்றும் பல்வேறு வர்த்தக வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

**5. 2017ஆம் ஆண்டு முதன் முதலாக நடைபெற்ற ஹவுஸ்டன் - இந்திய மாநாட்டின் கருப்பொருள் என்ன?**

A. இந்தியாவில் தயாரிக்கப்பட்டது - உட்கதை (Make in India -The Inside Story)

B. இந்தியாவில் தயாரிக்கப்பட்டது - உள் கலாச்சாரம் (Make in India -The Inside Culture)

C. இந்தியாவில் தயாரிக்கப்பட்டது - உள் புரட்சி (Make in India -The Inside Revolution)

D. இந்தியாவில் தயாரிக்கப்பட்டது - உள் திட்டம் (Make in India -The Inside Strategy)

**விடை: A. இந்தியாவில் தயாரிக்கப்பட்டது - உட்கதை (Make in India -The Inside Story)**

**விளக்கம்:** 2017ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதி நடைபெற்ற முதல் 'இந்தியாவில் தயாரிக்கப்பட்டது - உட்கதை' (மேக் இன் இந்தியா தி இன்சைடு ஸ்டோரி -' என்ற கருப்பொருளுடன் ஹூவுஸ்டனில் உள்ள ஆசிய சமுதாய டெக்சாஸ் மையத்தில் முதன் முதலாக ஹூஸ்டன் இந்திய மாநாடு நடைபெற்றது .2 - நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில், இந்தியாவில் ஆர்வமிகுந்த துறைகள் மற்றும் இந்தியாவில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கான சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றைப் பற்றி விவாதிக்கப்பட்டன. இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் இந்தியாவில் முதலீடு செய்வதில் ஆர்வமுள்ள

டெக்சாஸில் உள்ள பார்வையாளர்களுடன் இன்றைய இந்தியாவின் நிகழ் கதையை பகிர்ந்து கொள்வதற்கும் நவீனத்துவத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் மக்களால் பங்குபெறுவதுமாகும்.

**6. இந்தியாவிலேயே முதன் முறையாக எந்த மாநிலத்தில் சுய உதவிக்குழுக்கள் எனப்படும் (SHG)கள் மூலம் வங்கி சேவைகள் சென்றடையாத, வங்கிகளற்ற பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை உட்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது?**

A. கர்நாடகா

B. ஒடிசா

C. கேரளா

D. தமிழ்நாடு

**விடை: B. [ஒடிசா]**

**விளக்கம்:** இந்தியாவிலேயே முதன் முறையாக ஒடிசா மாநிலத்தில் சுய உதவிக்குழுக்கள் எனப்படும் (SHG)கள் மூலம் வங்கி சேவைகள் சென்றடையாத, வங்கிகளற்ற பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை உட்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, வங்கிகளற்ற பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் வங்கிச் சேவைகள் சென்றடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (எஸ்.பி.ஐ) உடன் மாநில அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. முதற்கட்டமாக SHG க்கள் வங்கிகளின் முகவர்களாக செயல்படும் இதன்மூலம் சுமார் 1000 வங்கி வசதிகளற்ற தொலைதூர கிராமப் பஞ்சாயத்துகள் வங்கிச் சேவைகளைப் பெறும். இந்த எண்ணிக்கை படிப்படியாக 4,000 வங்கி வசதிகளற்ற கிராமப் பஞ்சாயத்துகளுக்கு நீட்டிக்கப்படும். இந்த திட்டமானது கிராமப்புறங்களில் உள்ள பிரதம மந்திரி பீமா சுரக்ஷா திட்டம், பிரதம மந்திரி ஜீவன் ஜோதி திட்டம், அடல் ஓய்வூதிய திட்டம் போன்ற சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உள்ள மக்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். மேலும் டிஜிட்டல் வங்கி சேவைகளை மேம்படுத்துவதிலும் உதவிகரமாக இருக்கும்.

**7. டெஹ்மானன் ஆர். அன்யாரூரிஜினா என்பவர் சமீபத்தில் காலமானார், அவர் எந்த துறையைச் சேர்ந்தவர்?**

A. அரசியல்

B. விளையாட்டு

C. சட்டம்

D. அறிவியல்

**விடை: C. [சட்டம்]**

**விளக்கம்:** மூத்த வழக்கறிஞரும், சிறந்த நீதிபதியுமான டெஹ்மானன் ஆர். அன்யாரூரிஜினா (84) என்பவர் சமீபத்தில் காலமானார். இவர் 1996ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை இந்தியாவின் சொலிசிட்டர் ஜெனரலாக இருந்தார். இவர் தனிச்சிறப்பு வாய்ந்த கேசவானந்தா பாரதி வழக்கில் உச்சநீதிமன்றம் மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றின் மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த தீர்ப்பான, "கேசவானந்த பாரதி" வழக்கில் இவரும் தோன்றினார். மேலும் இவர் அரசியலமைப்பு சட்டத்தின் ஒரு பிரிவான பாராளுமன்றம் தொடர்பான சலுகைகள் மற்றும் தனது நிபுணத்துவத்திற்காக பரவலாக அவர் அறியப்பட்டார்.

**8. 'சிவில் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தலைமைப்பண்பு மாநாட்டை' தலைமையேற்று நடத்திய முதல் பெண் யார்?**

A. சுதா கிருஷ்ணமூர்த்தி

B. பிரகியா ஜெயின்

C. நிமிஷா பரீக்

D. [வனிதா குப்தா]

**விடை: D. [வனிதா குப்தா]**

**விளக்கம்:** இந்திய - அமெரிக்கரான வனிதா குப்தா 'சிவில் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தலைமைப்பண்பு மாநாட்டின்' தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மாநாடு அமெரிக்க சிவில் உரிமைகள் குழுக்களின் குடையின் செயல்படவுள்ளது. இதன் மூலம் மதிப்புமிக்க ஒரு அமைப்புக்கு தலைமை தாங்கும் முதல் பெண்மணி என்ற பெருமையைபெற்றார். இவர் ஜூன் 1, 2017 அன்று 'வேட் ஹென்டர்சன்' என்பவரிடமிருந்து இப்பதவியைப் பெறுகிறார். அனைத்து தரப்பு மனிதர்களுக்கான அவரது துணிச்சலான சட்ட உதவிகள் வழங்கியதிலும் மற்றும் ஒபாமா அவர்களின் நிர்வாகத்தின் நீதித்துறையில், சிவில் உரிமைகள் பிரிவின் தலைவராகவும் அவர் அறியப்படுகிறார். மேலும் வனிதா அதன் துணை நிறுவனமான 'தி லீடர்ஷிப் மாநாட்டு கல்வி நிதியத்தையும்' வழிநடத்துவார்.

**9. சமீபத்தில் வீசிய ‘டெப்பி சூறாவளி’ எந்த நாட்டை தாக்கியது?**

A. ஆஸ்திரேலியா

B. சீனா

C. ஜப்பான்

D. பிரேசில்

**விடை: A. [ஆஸ்திரேலியா]**

**விளக்கம்:** சமீபத்தில், வகை - 4 சூறாவளியான "டெப்பி சூறாவளி" மணிக்கு 263கிமீ வேகத்தில் வட-கிழக்கு ஆஸ்திரேலிய கடற்கரையை பகுதியை தாக்கியது இதனால் பெரும் சேதங்களும், சகதி மழையும் மற்றும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின் இணைப்பு துண்டிப்பு போன்றவையும் ஏற்பட்டது. மேலும் வடகிழக்கு ஆஸ்திரேலியாவில் உள்ள குயின்ஸ்லாந்தில் நிலச்சரிவும் ஏற்பட்டது. இந்த சக்தி வாய்ந்த சூறாவளி மின் இணைப்பு துண்டிப்பு மற்றும் சேதமடைந்த கட்டிடங்கள் என குறைந்தது 45,000 வீடுகளை பாதிப்படையச் செய்துள்ளது. மேலும் 2011ஆம் ஆண்டுக்கு பிறகு குயின்ஸ்லாந்தில் ஏற்பட்ட மிகப்பெரிய இயற்கை பேரிடரான இந்த சூறாவளியினால் பாதிப்படைவதற்குள் சுமார் 25,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**10. சத்விக்சாய்ராஜ் ரான்கிரெட்டி எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A. ஊஷூ (Wushu)

B. பேட்மிட்டன்

C. செஸ்

D. ஹாக்கி

**விடை: B. [பேட்மிட்டன்]**

**விளக்கம்:** சமீபத்தில் இந்திய ஆண்கள் இரட்டையர் பிரிவு ஜோடியான, சத்விக்சாய்ராஜ் ரான்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர், ஹானாயில் நடைப்பெற்ற $20,000 டாலர் வியட்னாம் ஓபன் சர்வதேச பாட்மிட்டன் போட்டியாளர் பட்டத்தை தாய்லாந்து இரட்டையர் டிராவட் போட்டிங்கெங்

மற்றும் நந்தகம் யோத்பாய்ஸோங் ஆகியோரை 17-21, 21-9, 21-15 என்ற கணக்கில் மூன்று ஆட்டங்களில் வீழ்த்தி வெற்றி பெற்றனர்.